

குமரிமுனையில் இருந்து அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் எளிதாக சென்றடையும் வகையில், படகு சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் மூன்று புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும் என்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுப்புக்கிணங்க கோவா கப்பல் கட்டும் தளத்தில் (Synergy Shipyard, Goa) நடைபெற்று வரும் படகு கட்டுமானப் பணிகள் தொடர்பாக நேற்று முன்தினம் (17.02.2026) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தமிழ்நாடு கடல்சார் வாரிய அலுவலர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல்அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில்

# தமிழ்நாடு கடல்சார் வாரியக் கூட்டம்!

சென்னை, பிப்.19-

தமிழ்நாடு கடல்சாரி வாரியத்தின் 98ஆவது வாரியக் கூட்டம் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 98ஆவது வாரியக் கூட்டம் நேற்று முன்தினம் (17.2.2026) தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை, 5ஆவது தளத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

வாரியக் கூட்டத்தினை தொடங்கி வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

அமைச்சர் அவர்களின் தொடக்கவுரையில்;

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 98வது வாரியக் கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் அரசுத்துறைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர் / துணைத்தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் அனைத்து உறுப்பினர்களையும் உளமார வரவேற்கிறேன்.

1069 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரையில் 3 பெருந்துறைமுகங்களும், 17 சிறுதுறைமுகங்களும் உள்ளன. தமிழ்நாடு கடற்கரை நெடுக உள்ள 14 கடலோர மாவட்டங்களில் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு சிறுதுறைமுக மேம்பாட்டுத் திட்டங்கள் கடந்த 5 ஆண்டுகளில் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை குறிப்பிட்டார்கள்.

கடந்த 40 ஆண்டுகளாக செயல்பாட்டில் இல்லாத கடலூர் துறைமுகம், தனியார் துறைமுக இயக்கு நிறுவனம் மூலம், இயக்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டு, சரக்கு கையாள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொன்றுதொட்டு வந்த தமிழ் உறவுகளை இணைக்கும் வண்ணம், துரித முயற்சி மேற்கொண்டு நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கையில் உள்ள காங்கேசன்துறைக்கு (யாழ்ப்பாணம்) பன்னாட்டு பயணிகள் படகுப் போக்குவரத்து அக்டோபர் 2023இல் துவக்கப்பட்டு, தற்போது வரை வெற்றிகரமாக இயக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், பெரிய முதலீட்டுடன் துறை முகங்களை அமைக்கும் நோக்கில், நீண்டகால ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் வண்ணம் தமிழ்நாடு சிறுதுறைமுக மேம்பாட் டுட்டுக் கொள்கை 2023இல் புத்தாக்கம் செய்யப்பட்டு 15.11.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

வெள்ளி விழா கண்ட அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலையினை இணைக்கும் நோக்கில், புதிய கண்ணாடிப் பாலம் அமைக்கப்பட்டு, 31.12.2024 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இருந்தும் மற்றும் வெளி நாடுகளிலில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் திரளாக வந்து கண்டுகளித்து செல்கின்றனர்.

தென் தமிழ்நாட்டின் கடலோர பகுதிகளில் அமையவுள்ள சிறுதுறைமுகங்களை நிர்வகிக்கும் நோக்கில், இராமேஸ்வரம் துறைமுகத்தில், ஒரு புதிய நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 30.7.2025 அன்று திறப்பு விழா நடைபெற்றது.

இராமேஸ்வரத்தில் சுற்றுலாப் படகுப் போக்குவரத்தை துவக்கி சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்ததூர கடல்பயணம் மேற்கொள்ள வசதியாக இரண்டு இடங்களில் (அக்னிதீர்த்தம் மற்றும் பாம்பன் அணுகு பகுதி) மிதக்கும் தோணித்துறைகள் கட்டப்பட்டு வருகிறது.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கன்னியாகுமரிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் வசதிகளை மேம்படுத்துவதற்காக, புதிதாக 3 படகுகள் (1. பெருந்தலைவர் காமராசர் 2. மார்ஷல் நேசமணி 3. ஜி.யு. போப்) வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதில், "பெருந்தலைவர் காமராசர்" என்று பெயரிடப்பட்ட படகு கட்டுமானப் பணிகள் விரைவில் நிறைவடையவுள்ளன. 3.2.2026 அன்று கட்டுமான பணிகள் நடைபெறும் கோவாவிற்குச் (Synergy Shipyard, Goa) சென்று, இப்பணிகளை களஆய்வு செய்து, படகின் கட்டுமான பணிகளை விரைவாக நிறைவு செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

2018-19 ஆம் நிதியாண்டின் இறுதியில், 12 இலட்சம் மெட்ரிக் டன்கள் கையாண்ட தமிழ்நாட்டின் சிறுதுறைமுகங்களில் திறன் மேம்பாடு செய்யப்பட்டு, சரக்கு கையாளுதல் படிப்படியாக உயர்ந்து, தற்போது கடந்த நிதியாண்டின் (2024-25) இறுதியில் சுமார் 118 இலட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மேலும் சில முன்னெடுப்புகளைப் பற்றி அமைச்சர் விளக்கிக் கூறினார்;

கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், மத்திய மற்றும் மேற்கு மாவட்டங்களிலுள்ள சரக்குகளை கையாள்வதற்காக ஒரு புதிய பசுமை வளத்துறைமுகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 1 மணிநேர பயணதூரத்தில் சென்றடையக்கூடிய இலங்கையில் உள்ள தலைமன்னாருக்குப் பயணிகள் சேவையினை துவக்குவதற்கான இராமேஸ்வரத்தில் பன்னாட்டு வசதியுடைய பயணிகள் முனையம் மற்றும் தோணித்துறை அமைப்பதற்கு, ஒன்றிய அரசிடம் நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில், தேவனாம்பட்டினம் அருகே அமைந்துள்ள நூற்றாண்டு பழமையான துறைமுக அலுவலர் குடியிருப்பு வளாகத்தை, கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியக வளாகமாக மாற்றுவதற்கான பூர்வாங்கப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் அனைத்து கடலோர மாவட்டங்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசால் 1.4.2026 அன்று முதல் துவக்கப்படவுள்ள சாகர்மாலா 2.0 திட்டத்தின்கீழ், நிதியுதவி கோரி, சுமார் 18,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நிலையான வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றை கருத்திற்கொண்டு, கடல்சார் கட்டமைப்புகளை உருவாக்கி, சிறுதுறைமுகங்களை மேம்படுத்தி, தமிழ்நாட்டை முன்னணி கடல்சார் மாநிலமாக உருவாக்கும் நோக்கில், "தமிழ்நாட்டின் வளர்ச்சியில் யாரையும் பின்தங்க விடமாட்டோம். வெல்வோம் ஒன்றாக" என்ற முதலமைச்சரின் சூளுரையை தொடர்ந்து பணியாற்றவும், இதுவரை இந்த வாரியத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து உறுதுணையாக இருந்த அனைத்து வாரிய உறுப்பினர்களுக்கும், கடல்சார் வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்தார்.

அமைச்சர் அவர்களின் உரையை தொடர்ந்து, வாரியக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்படி விவாதங்களுக்குப் பிறகு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அரசுச் செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம் துறையூர் அடுத்த காளிப்பட்டியில் தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு பெரம்பலூர் தொகுதி எம்.பி. அருண் நேரு அடிக்கல் நாட்டினார். அருகில் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார், முன்னாள் ஊராட்சி குழு தலைவர் ராஜேந்திரன், நகர செயலாளர் முரளி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, வீரபத்திரன், சரவணன், உப்பிலியம் ஒன்றிய செயலாளர் முத்துச்செல்வன், அசோக்குமார், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் சரண்யா, நகராட்சி தலைவர் செல்வராணி, கார்த்திக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பல்லடம், காரணம்பேட்டையில் நடைபெற்ற தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுக் கூட்டத்தில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா, கழகச் செய்தி தொடர்புக்குழு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக மருத்துவ அணி செயலாளர் எழிலன் நாகநாதன், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, மகளிர் தொண்டரணி இணை செயலாளர் அ. தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் (ஓய்வு), கனவு தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் சம்பந்தம், மாவட்ட கழக செயலாளர்கள் க.செல்வராஜ் எம்.எல்.ஏ, மண்டலத் தலைவர், இல.பத்மநாபன், கே.ஈஸ்வரசாமி எம்பி, மேயர் ந.தினேஷ்குமார் உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இரா.சங்கர் முன்னிலை! திருக்குவளையில் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி அளவில்

# 'வெல்லும் தமிழ்ப்பெண்கள்' ஸ்டாலினின் மகளிர்படை பரப்புரை பயிற்சிக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை !

நாகை. பிப்.19 -

நாகை மாவட்டம் திருக்குவளையில் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி அளவில் பாகத்திற்கு ஒருவரை பொறுப்பாளராக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இல்லம் தோறும் பரப்புரை பற்றிய பயிற்சிக்கான வெல்லும் தமிழ்ப்பெண்கள் என்ற தலைப்பில் ஸ்டாலினின் மகளிர்படைக்கு பரப்புரை பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராஜன், க.இராஜேந்திரன். ஒன்றிய தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கீழையூர் கிழக்கு ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், கீழ்வேளூர் தெற்கு பழனியப்பன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ் ஆகியோர் முன்னிலையில் வைத்தனர். கீழையூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் சோ.பா.மலர் வண்ணன் வரவேற்றார்.

கூட்டத்திற்கு நாகப்பட்டினம் மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கு தலைவர் என்.கௌதமன் தலைமை தாங்கி வெல்லும் தமிழ்ப்பெண்கள் ஸ்டாலினின் மகளிர்படையினர் பரப்புரையின் போது செய்ய வேண்டிய பணிகள் குறிக்கு விளக்கி பேசினார். கூட்டதில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், பொதுக் குழு உறுப்பினர் கோ.சிவகுமார், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர் ஜவஹர் பாஷா, பாலாஜி, லோகநாதன், தியாகராஜன், ஜோதிபாசு, மாவட்ட பிரதிநிதிகள் ஆர். நடராஜன், சி.வீரமணி, மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் கௌசல்யா இளம்பரிதி, மாவட்ட மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் மீரா, கவிதா, மோகனா, மாவட்ட தொண்டர் அணி வலைதள பொறுப்பாளர் ஹேமலதா சரத்பாபு,

மற்றும் வெல்லும் தமிழ்ப்பெண்களின் ஸ்டாலினின் மகளிர்படையினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார் முடிவில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.புவனேஸ்வரி நன்றி கூறினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர் திராவிட மாடல் அரசர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி வரும் மகளிர் உரிமைத் தொகையை பா.ஜ.க., அ.தி.மு.க.வின் சதியை முறியடித்து தேர்தல் நடைமுறை கால மாதத்திற்கு மகளிர் உரிமைத்தொகை 3 மாதத்திற்கு 3,000 மற்றும் கோடைகால சிறப்பு தொகை ரூபாய் 2,000 என 5,000 ரூபாயை 1.31 கோடி மகளிருக்கு வழங்கிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், பூத்திருக்கு 10 பேர் நியமிக்கப்பட்டுள்ள ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்துக் கூறி திராவிட மாடல் அரசு பெண்கள் நலத்திட்டங்களால் எவ்வாறு அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் வளர்ச்சிக்கும் பயன்பாட்டு வருகிறது என்று விளக்கி,தமிழ்நாடு முதல்வர் மு க ஸ்டாலின் முதல்வராக தொடங்கிட, நலத்திட்டங்களும் நிக்காமல் தொடர்ந்திட ஆதரவு கட்டாயம் தேவை என்று திட்டங்களை கூறி ஆட்சியின் சாதனைகள விளக்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 22.2.2026 ஞாயிற்றுக்கிழமை, கோவை, கருமத்தம்பட்டி, கணியூர் டோல்கேட் அருகில்

# கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. இளைஞர் அணி மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவின்பேரில், தலைமைக் கழக அனுமதியுடன் கழக இளைஞர் அணிக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கிளை - வார்டு - பாகங்களில் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட 28 மாவட்டங்கள் - 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 1,50,000 நிர்வாகிகளை திருவண்ணாமலையிலும் -

தென் மண்டலத்துக்கு உட்பட்ட 20 கழக மாவட்டங்கள் - 58 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த 1,00,000 நிர்வாகிகளை விருதுநகரிலும் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், மாண்புமிகு துணை முதலமைச்சருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்;

கழகத் துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அவர்கள் வரவேற்புரையாற்றிட; , மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா தலைவர் - தாட்கோ, ப.அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ள;

வருகிற **22.02.2026** ஞாயிற்றுக்கிழமை, மாலை 3.00 மணி அளவில், **கோவை, கருமத்தம்பட்டி, கணியூர் டோல்கேட் அருகில் "மேற்கு மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு"** நடைபெற உள்ளது.

இதில், மேற்குமண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை "மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு" அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரலாறு படைக்கப் போகும் இந்த "தி.மு.க. இளைஞர் அணி மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பில்" மாண்புமிகு அமைச்சர் பெருமக்களான சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, டாக்டர் மா.மதிவேந்தன், திருமதி என்.கயல்விழி செல்வராஜ்;

மாவட்டச்செயலாளர்கள்/பொறுப்பாளர்களான தளபதி முருகேசன், தொ.அ.ரவி, மேயர் என்.தினேஷ்குமார், க.செல்வராஜ், எம்.எல்..ஏ., இல.பத்மநாபன், கே.ஈஸ்வரசாமி, எம்.பி., என்.நல்லசிவம், கே.ஆர்.என். இராஜேஷ்குமார்,எம்.பி., கே.எம்.ராஜு, தோப்பு வெங்கடாசலம், கே.எஸ்.மூர்த்தி, துரை. செந்தமிழ்செல்வன்;

மாநகரச் செயலாளர்களான மு.சுப்பிரமணியம், டி.கே.டி.மு.நாகராசன், ஈ.தங்கராஜ், எஸ்.பி.கனகராஜ்,

நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களான கணபதிராஜ் குமார், எம்.பி., கே.ராமச்சந்திரன், எம்.எல்.ஏ., வி.சி.சந்திர குமார், எம்.எல்.ஏ., ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., ரா.இளங்கோ, எம்.எல்.ஏ., பி.ராமலிங்கம், எம்.எல்.ஏ., திருமதி கே.சிவகாமசுந்தரி, எம்.எல்.ஏ, ஆர்.மாணிக்கம், எம்.எல்.ஏ.,

மேற்குமண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான சபரிகார்த்திகேயன், எம்.ஏ.ஆர்.கே. ஹக்கீம், இரா.தனபால், மு.ஜெயக்குமார், ஜெ.திருவாசகம், ஏ.திருவேங்கடம், சன் சுரேஷ், சி.விஸ்வநாத், ஆர்.பாலாஜி, வெங்கமேடு சக்திவேல், இமயம் சசிக்குமார்,

மாநகர அமைப்பாளர்களான எம்.எஸ்.ஆர்.ராஜு, முத்துக்குமார், கே.டி.சேந்தபுகழன், கராத்தேபூபதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 18.2.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**